அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங்கருணை!

அருட்பெருஞ்ஜோதி!
அருட்பெருஞ்ஜோதி!


எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
கொல்லா நெறியே குவலயமெல்லாம் ஓங்குக!

வேம்பிராய் - மீசாலை – கொடிகாமம் - இலங்கை

# சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானகோட்டம

# சன்மார்க்கநேசன்-2014

## கார்த்திகைமாத இதழ்




தயவு

அருட்பெருஞ்ஜோதி !
தனிப்பெருங்கருணை!

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

"இன்று வருமோ நாளைக்கே வருமோ
மற்றொன்று வருமோ அறியேன் என்கோவே
துன்னுமல வெம்மாயை யற்று
வெளிக்குள் வெளி கடந்து
சும்மா இருக்கும் சுகம்."



அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமர்ந்தபேரொளியே
அன்புருவாம் பரசிவமே.

# விரதம்

1. விரதத்தின் பொதுத்தன்மை
2. விரதத்தின் இலக்கணப் பொருள் விளக்கம்
3. விரதத்தின் அகஅனுபவப் பொருள் விளக்கம்

## விரதத்தின் பொதுத்தன்மை

உலகத்திலே எல்லா மதங்கள் மார்க்கங்களைச் சார்ந்தவர்கள் யாவராலும் விரதம் கடைப்பிடிக்கப்பட்டும் கொண்டாடப்பட்டும் வருகின்றது. பல்வேறு மார்க்கங்களில் விரதங்களைக் கடைப்பிடித்து கொண்டாடிவந்தாலும் மக்களிடையே ஒருமைப்பாடும் கருணையும் வளரவில்லை. இதற்குரிய காரணத்தை நன்கு தெளிவோமானால் மக்களினம் புறநிலையில் இருந்து தங்களுடைய பக்குவ அபக்குவ நிலைக்கு ஏற்றவாறு விரதங்களை கடைப்பிடிப்பிடிப்பதேயாகும். ஆனால் உண்மையிலே எல்லா மதத்தைச்சார்ந்த பெரியவர்களும் விரதங்களை கடைப்பிடிப்பதன் மூலம் அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்தி தங்களுக்குள்ளே ஓரளவு இறை அனுபவத்தைப் பெற்றது உண்மைதான் ஆயினும் மக்களிடையே கருணை உணர்வு வளர்வதற்குப்பதிலாக வேற்றுமைகளே வளர்ந்திருக்கின்றன. அதனாலே தான் அன்றும் இன்றும் மதச்சண்டைகள் நடைபெற்று பேரளவிலே உயிர்ச்சேதத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. இதன் காரணமாக மக்களினம் மேம்பாடு அடையவில்லை.

இன்னும் மதங்களையும் மார்க்கங்களையும் ஆராய்வோமானால் விரதம் என்கின்ற போர்வையை போர்த்திக்கொண்டு மனிதனுக்கு தொண்டு செய்கின்ற ஜீவராசிகளை கொன்று குவித்து உண்டு மகிழ்ந்து வருகின்றான். ஆனால் விரதத்தை கடைப்பிடிக்கின்ற மாமனிதர்கள் பிற ஜீவராசிகளுக்கு

துன்பம் விளைவிப்பார்களாயின் அவர்கள் அந்த விரதத்தைக் கடைப்பிடித்தும் பயனில்லாமல் போகின்றன. ஆனால் உண்மையிலே விரதம் என்பது மனிதனுடைய உள்ளத்தைப் பண்போடு அடையவைத்து பெரும் கருணை உணர்வோடு எறும்பிலிருந்து யானையீறாக இறைவனால்ப் படைக்கப்பட்ட 84 இலட்சம் ஆன்மபேத உயிரினங்களையும் காத்து கருணைத்தொண்டு புரிந்து தன்னைப்போலே பிற ஜீவராசிகளையும் இன்பகரமாக வாழ்வதற்கு விரதம் பெரிதும் துணைநிற்க வேண்டும். உலகம் தோன்றி அண்ணளவாக 3000 கோடி ஆண்டுகள் என பெரியோர்கள் கூறுகின்றார்கள். இந்தக் காலப்பகுதியிலே மேம்பாடு அடைய வேண்டிய மனிதன் விரதங்களைத் தவறான வழியிலே கடைப்பிடித்து அனுபவிப்பதே காரணமாக இருக்கின்றது. ஆதலால் இனிவரும் காலங்களிலே மக்களினம் சரியான முறையிலே விரதத்தைக் கடைப்பிடித்து உயிர் இரக்கத்தை வளர்க்க வேண்டும் என எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி இராமலிங்கப் பெருமானை வேண்டிநிற்கின்றோம்.

## மொழிகளின் தோற்றம்

ஜீவராசிகள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தி ஒரு ஜீவராசி இன்னொரு ஜீவராசிக்கு செயற்பாடுகளைச் செயற்படுத்தவே மொழி மூலகாரணமாக அமைந்துள்ளது. ஆனாலும் எல்லா ஜீவராசிகளும் தங்களுக்குள்ளே ஒலியங்களை உருவாக்கியே தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தி வருகின்றன. அதே போல மனிதனும் ஒருவருக்கொருவர் எண்ணங்களை வெளிப்படுத்தி செயற்பாடுகளை வெளிப்படுத்துவகற்கே உலகத்திலே பல்வேறு மொழிகள் தோற்றம் பெற்றுள்ளன. அதிலே ஆங்கிலமொழியானது வணிபமொழியாகவும், பிரன்ஸ்மொழி அழகுமொழியாகவும், தமிழ்மொழி வாழ்வியல்மொழியாகவும், உலகத்திலே வெளிப்பட்டு வருகின்றது. ஆங்கிலமொழியாகிய வணிபமொழி முதலாளிவர்க்கத்தினால் பாவிக்கப்பட்டு உலகத்திலே

போட்டிகளையும் பொறாமைகளையும் ஏற்படுத்தி மக்களினைப் பிரிவினைகளுக்குள் உள்ளாக்கி வருகின்றது.

இன்னும் சொல்லப்போனால் ஆயுதக் கலாச்சாரம் வளருவதற்கும் வணிபமொழியாகிய ஆங்கிலமொழிதான் காரணமாகின்றது. இன்னும் தெளிவோமானால் ஆங்கிலமொழியினுடைய வல்லாதிக்கம் உள்ள நாடுகளில்தான் பலவிஞ்ஞானிகள் தோன்றியிருக்கின்றார்கள். வணிகத்தின் அடிப்படையிலேயே விஞ்ஞானம் தோன்றியதால் மக்களிற்கு கருணையை வளர்ப்பதற்குப் பதிலாக மூடித்தனத்தை வளர்த்து சண்டைக்கும் சச்சரவிற்கும் ஆதாரமாகிவிட்டது. உதாரணமாக ஒருநாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு பிரயாணிப்பதற்கு ஆகாயவிமானத்தைப் பயன்படுத்துவது கருணைதான். ஆனால் அதே விமானம்தான் குண்டு மாரிகளைப் பொழித்து ஜீவராசிகளை அழிப்பதற்கும் அணுகுண்டுகளைவீசி உலகத்தையே அழிப்பதற்கும் காரணமாகிவிட்டது. ஆகையால்தான் விஞ்ஞானவளர்ச்சியால் மனிதஇனம் மேம்பாடு அடைவதற்குப் பதிலாக அறிவு விளக்கம்குன்றி மிருகங்களைவிட கீழ்த்தரமான நிலைக்குச் சென்றுவிட்டான். இனிவருங்காலத்திலாவது மொழியையும் விஞ்ஞானத்தையும் ஜீவராசிகளுடைய வாழ்க்கையின் நன்மைக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இனியும் 10000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்மொழியை எடுத்து ஆராய்வோமானால் தமிழ்மொழியானது இந்தியத்திருநாட்டிலே தோன்றிய ஞானிகளால் இறைத்தன்மையை வெளிப்படுத்துவற்கு பெரிதும் துணைசெய்திருக்கின்றது எனினும் மிகையாகாது. இந்த மொழியானது இந்தியாவிலே தமிழ்நாட்டிலே பல ஞானிகள் இறையருளைப் பெறுவதற்கும் பெற்ற அனுபவத்தை மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டவும் இந்த தமிழ்மொழியானது அருள்மொழியாகத் திகழ்கின்றது. தற்காலத்திலே விஞ்ஞான செயற்பாடுகளால் மக்களினம் மோகங்களுக்குள்ளாகி ஆங்கிலமொழியினுடைய அடிமைத்தனத்திற்கு ஆளாகிப்போய் அறிவுவிளக்கம் குன்றி இயற்கைச்சீற்றங்களாலும் மக்களினுடைய

கருணையில்லாத செயற்பாடுகளினாலும் உலகம் அழிவினுடைய விளிம்பிற்குள் வந்து நிற்கின்றது. இதனாலேதான் ஆயுட்பெருக்கோடு வாழவேண்டிய மனிதன் ஆயுளைச் சுருக்கிக் கொண்டு மரணத்தின் கதவுகளைத் திறக்கின்றான். இந்த நிலைமாற வேண்டுமானால் வாழ்வியல்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட தமிழினம் கருணையை வெளிப்படுத்தி உயிர்இரக்க நிலையைக் கருத்திற்கொண்டு உலகமக்களுக்கு வழிகாட்டியாக வாழவேண்டும் அப்போது தான் உலகத்தை அழிவுப்பாதையில் இருந்து மீட்டெடுக்க முடியும். இனி தமிழ் மொழியினுடைய வாழ்வியல் சிறப்பைப்பற்றி ஆராய்வோம்.

தமிழ்மொழியிலே ஒலியங்கள் உயிர் எழுத்து 12 ஆகவும் மெய் எழுத்து 18 ஆகவும் பொதுவான ஒலியமாக குற்றியலுகரம், குற்றியலகரம், குற்றியமகரம் என தமிழ்மொழி 33 ஒலியங்களை உடையது. தமிழிலே உயிர்ஒலியமும் மெய்ஒலியமும் சேர்ந்து 247 உயிர்மெய் ஒலியங்களை உருவாக்குகின்றன. அதேபோல உயிரும் மெய்யாகிய உடம்பிலே வெளிப்பட்டு 84 இலட்சம் ஆன்மபேத ஜீவராசிகள் தோன்றுகின்றன. இதிலே மனித உடலைப்பெற்ற ஆன்மாக்கள் உயர்ந்த பிறப்புடைய ஜீவர்களாக இருக்கின்றன இந்த மனித உடம்பிலே முள்ளந்தண்டானது 32 கொழுவி எலும்புகளைக் கொண்டு நிமிர்ந்த நிலையிலே இருக்கின்றது.

இந்த முள்ளந்தண்டானது ஆசனத்துவாரத்திலிருந்து புருவமத்தியீறாக 33 ஒலியங்களையும் வெளிப்படுத்திக்காட்டி நிற்கின்றது. இந்த ஒலியங்கள் தான் மேலாதார நிலையாகிய புருவமத்தியில் பொருந்துவதற்கு ஞானிகளால் மந்திரங்கள் உருவாவதற்கு மூலகாரணமாக அமைந்தது. இந்த அடிப்படையில்த் தான் ஞானிகள் தங்கள் பக்குவ அபக்குவ நிலைக்கேற்ப பல்வேறுபட்ட மந்திரங்களை உருவாக்கித்தந்து மக்களினத்தை மேம்பாடடைய வைப்பதற்கு பெரிதும் தொண்டாற்றினார்கள். அந்த வகையிலே 19ம் நூற்றாண்டு காலப்பகுதியிலே வாழ்ந்த இராமலிங்க அடிகளார் உயிர் இரக்கத்தின் உச்ச நிலையிலிருந்து மக்களினத்தை ஜீவகாருண்ய உள்ளுணர்வுடன் வாழவைப்பதற்காக

**"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"**

எனும் மகாமந்திர வாக்கியத்தை உலகத்திற்கு தந்து ஒவ்வொரு மனிதனும் கொலை,புலை தவிர்ந்த நெறியிலே எறும்பிலிருந்து யானையீறாக மனிதன் வரையில் சகோதர உணர்வுடன் வாழவேண்டும் என்று உயிர் இரக்கத்தோடு எங்களுக்காக அழுது தொழுது இறைவனை வேண்டிநிற்கின்றார்.

இன்னும் இந்த தமிழ்மொழியை நாம் அனுபவிக்கும் போது **அ** இல் இருந்து **ஔ** வரை 12 உயிர்ஒலியங்களையும் 13வது நிலையாகிய புருவமத்தியிலே ∴ எனும் எழுத்தை வெளிப்படுத்திக்காட்டி 13வது துவாதசாந்த அனுபவத்தைப் பெறுவதற்கு ∴ எனும் எழுத்தை வெளிப்படுத்திக்காட்டினார்கள். இனி இந்த ∴ எனும் எழுத்தை சற்று ஆராய்வோமானால் ∴ல் காணப்படும் கீழே உள்ள இரண்டு புள்ளிகளும் இரண்டு கண்களையும் குறிக்க மேலுள்ள புள்ளி உச்சிக்கு கீழே இரண்டு கண் புருவங்களுக்கு இடையில் அண்ணாக்குக்கு மேலே உள்ள புருவமத்தியைக் குறிக்க வந்தது. இதனாலே தான் ஒவ்வொரு மனிதனும் புருவமத்தியிலே மனதை நிறுத்தி கருணையோடு இருப்பானாயின் இறைவனுடைய கருணையைப் பெற்று இறைவண்ணமாக ஜீவகாருண்ய தொண்டு புரிந்து வாழ்ந்து வந்தால் ஒவ்வொரு மனிதனும் இறைவண்ணமாக மாறி திரிதேக சித்தியோடு என்றும் அழியாத மரணமில்லாப் பெருவாழ்வு வாழலாம். என்பது வள்ளலாருடைய வாக்காக இருக்கின்றது. ஆதலால் நாமும் தமிழ் ஒலியங்களை சரியான முறையில் வரையறைக்குட்படுத்தி பயன்படுத்தி மகாமந்திரத்தை நினைவில் நிறுத்தி மகாமந்திர உணர்வே வாழ்வாக வாழ்ந்து வந்தால் நாமும் இறைத்தன்மை கொண்ட மனிதர்களாக வாழ்ந்து இந்த உலகத்தை மேம்பாடு அடையவைக்க முடியும்.

## விரதத்தினுடைய இலக்கணப் பொருள் விளக்கம்

ஒலியங்களினுடைய செயற்கையால் மேலாதார நிலையிலே பொருந்தக்கூடிய நல்ல சொல்லாக்கமும் கீழாதார நிலையிலே பொருந்தக்கூடிய நல்ல சொல்லாக்கமும் உருவாகின்றன. அதிலே விரதம் என்கின்ற ஒலியங்களின் செயற்கையால் உருவான சொல்லானது மேலாதார நிலையிலே பொருந்தி இறை அனுபவத்தை தரக்கூடிய நல்ல சொல்லாக அமைந்திருக்கின்றது. இனி இந்த விரதம் என்கின்ற சொல்லினுடைய ஒலியங்களின் செயற்கை பற்றி இலக்கண நெறி நின்று ஆராய்வோம்.

இந்த விரதம் என்கின்ற சொல்லின் ஒலியங்களைப் பிரித்தால் வி+ரதம் எனப் பிரியும். இதிலே இந்த வி என்பது வ் என்கின்ற மெய் ஒலியமும் இ என்கின்ற உயிர் ஒலியமும் சேர்ந்து உயிர் மெய் ஒலியமாக வி என்ற எழுத்து உருவாகி நிற்கின்றது. இ என்ற எழுத்தை அருள் பிரணவ எழுத்து என்று பெரியோர்கள் கூறுவார்கள். இன்னும் இந்த எழுத்தானது இறை அருளை வெளிப்படுத்துகின்ற ஒலியமாக இருக்கின்றது. ஆகவே இந்த விரதம் என்கின்ற சொல்லானது உடலிலும் உயிரிலும் இறை அனுபவத்தை அனுபவிப்பதற்கு நல்ல ஒலியங்களின் செயற்கையால் அமைந்த மிகச்சிறிய சொல் ஆகும்.

இன்னும் இந்த விரதம் என்கின்ற சொல்லை இலக்கண நெறி நின்று அனுபவிப்போமானால் விரதம் என்கின்ற சொல்லை உச்சரிக்கின்ற பொழுது மகரமெய் ஏறி இந்த சொல் உச்சரிக்கும் பொழுது இரண்டு உதடுகளும் மூடுகின்றன. மூடும் பொழுது நாம் சுவாசிக்கின்ற காற்று மண்டலமும் ஜீவனும் நட்டமடையாமல் இருக்கின்றதை இந்த சொல்லை உச்சரிக்கின்ற போது அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் இந்த சொல்லை உணர்வு பூர்வமாக உச்சரிக்கும் பொழுது நல்ல இறை அனுபவத்தை தந்து உயிர் விளக்கமடைகின்றதை அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே இந்த விரதம் என்கின்ற சொல் ஒலியங்களை உச்சரிக்கும் பொழுது இந்த உடம்பிலே இயங்குகின்ற

உயிரிலே இறை அனுபவத்தை வெளிப்படுத்திக் காட்டி நிற்கின்றது. ஆகவே இந்த விரதம் என்கின்ற சொல் உலக மக்களிடையே பெரிதும் உயர்ந்த சொல்லாகப் பாவனையிலிருந்து வருகின்றது.

## விரதத்தின் அக அனுபவ விளக்கப் பொருள்

பழைய காலத்தில் ஐந்து குதிரைகள் பூட்டப்பட்ட தேரிலே ராசாக்கள் ஏறிச்சென்று மாலைப்பொழுதிலே கிராமப் புறங்களுக்குச் சென்று இயற்கை காட்சிகளை அனுபவித்து சந்தோசப்படுவார்கள். இதே போல முன்பு இந்த விரதம் என்கின்ற சொல்லை பிரித்துப் பார்த்தது போன்று வி+ரதம் எனப்பிரித்து அனுபவிப்போமானால் வி என்கின்றது அருளைக் குறிக்க ரதமாகிய இந்த உடம்பிலே வி என்கின்ற ஒலியத்தில் வருகின்ற வ் என்ற மெய் ஒலியமும் இ என்ற உயிர் ஒலியமும் சேர்ந்து இருப்பது போன்று இந்த உடம்பாகிய தேரிலே உயிர்ச்சக்தியானது இறைவனுடைய அருட்சக்தி கொண்டு இயங்கி வருகின்றது. ஆனால் மக்களினம் இந்த உடம்பிலே உயிரானது இறைவனின் அருட்கொண்டு இயங்குகின்றதை உணராத காரணத்தினால் 54 புலன்வழி உணர்வுகளைப் புறம் தழுவ விட்டு சிற்றின்பங்களிலே ஆழ்ந்து இந்த மெய்யாகிய உடம்பை பொய்யாக்குகின்றார்கள்.

ஆனால் மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொரு ஆன்மாக்களும் இறை அனுபவத்தை பெறும் பொருட்டே இறைவன் இந்த உடலையும் உயிரையும் உள்ளத்தையும் ஆக்கித்தந்திருக்கின்றான். ஆனால் நாங்களோ உயிரிலே பற்றுதல் வைக்காமல் உடம்பிலே பற்றுதல் வைத்து உடல்ப்பற்றோடு வாழ்ந்து உயிர் அனுபவம் பெறாமலும் உடல் தான் வாழ வந்தது என்ற அனுபத்தோடு வாழ்ந்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகின்றோம். இதை விடுத்து இந்த உடம்பாகிய ரதத்திலே உயிரும் மெய்யும் சேர்ந்திருப்பது போன்று இந்த உடலினையும் உயிரினையும் கருணையோடு காத்து ஜீவகாருண்யமே தெய்வவழிபாடாக வாழ்வோமானால் இந்த உடலிலே அருள் நிரப்பப்பட்டு இந்த பொய்யான உடம்பு மெய்யுடம்பாகத்

திகழும். இந்த பொய் உடம்பை மெய் உடம்பாக ஆக்குவதற்கு நாம் உண்ணுகின்ற ஆகாரம் 90% மான ஜீவநட்டத்தை ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்துகின்றது. இவ்வண்ணமாக இவ்வண்ணமாக இந்த ஜீவன் நட்டமடைவதால் தான் இந்த மெய்யான உடம்பு பொய்யாகிப் போகின்றது. இதை உணர்ந்து மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொரு ஆத்மாக்களும் விரதம் இருப்பதன் மூலம் ஆகாரத்தை குறைத்து சாத்வீக ஆகாரத்தை உண்டு கருணை நன் முயற்சியோடு புருவமத்தியிலே பொருந்தி வாழ்வு நடத்துவோமானால் இந்த வாழ்வினாலே பொய்யான உடம்பு மெய்யுடம்பாக மாறி அருள் ஒலி வீசி சச்சிதானந்தமான வாழ்வைத்தரும் என்பது சித்தப்பெருமக்களுடைய வாக்காக இருக்கின்றது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் வருங்காலத்திலேயாவது கருணை நல் முயற்சியோடு விரதத்தைக் கடைப்பிடித்து சாத்வீக குணத்தோடு நல்ல அருள் ஒலிவீச ஜீவகாருண்யத் தொண்டு புரிந்து உயிர் இரக்கத்தை வளர்த்துக்கொண்டு ஜீவகாருண்யமே தெய்வவழிபாடு என்ற வள்ளல்பெருமானுடைய கோட்பாட்டுக்கு அமைய வாழ்வோமாக!

## விரதத்தின் செயற்பாடு

நாம் உண்ணுகின்ற ஆகாரம் சாத்வீக ஆகாரமாக இருந்தால் குறைந்தது இரப்பையில் சென்று சமிபாடு அடைவதற்கு 5 மணித்தியாலங்கள் எடுக்கும் என பெரியோர்கள் கூறுகின்றார்கள். ஒரு மனிதன் சராசரியாக ஒரு நாளைக்கு 3 வேளை உணவை உண்ணுகின்றான் அந்த 3 வேளை உணவும் இரப்பையிற்குள் சென்று சமிபாடு அடைவதற்கு அண்ணளவாக 15 மணித்தியாலங்கள் எடுக்கின்றன. அசைவ ஆகாரமாக இருந்தால் அண்ணளவாக 3 வேளை ஆகாரமும் சமிபாடு அடைவதற்கு 18 மணித்தியாலம் எடுக்கும் என்று கூறுகின்றார்கள். ஆகவே தான் சித்தப்பெருமக்கள் ஜீவகாருண்யத்தை மையப்படுத்திக் கொண்டு சாத்வீக ஆகாரம் தான் சிறந்தது என்று கூறியிருக்கின்றார்கள். நாம் விரதங்களைக் கடைப்பிடிக்கும் பொழுது ஆகாரத்தை தவிர்த்து இறை

சிந்தனையோடு இருப்பதால் இரப்பையிலே சமிபாடு அடைவதற்கு தேவைப்படுகின்ற ஜீவசக்தி மேலாதார நிலைக்கு கிளம்பி புருவமத்தியில் இருந்து மேலும் மேலாதார நிலைக்கு சக்தியைச் செலுத்தும் போது அமுதங்கள் சுரந்து பசியைப் போக்கிக் கொண்டு புற ஆகாரங்களில் இருந்து படிப்படியாக விடுதலை பெற்று பரிபூரணமாக அமுதங்களின் துணை கொண்டு பசியை நிரந்தரமாக அணைத்துக்கொண்டு வாழலாம் என்பது அருட்சித்தர்களுடைய வாக்காக இருக்கின்றது. ஆகவே மனிதப்பிறவி எடுத்த நாம் ஒவ்வொருவரும் விரதத்தை சரியான முறையிலே கடைப்பிடித்து இறை அருள் அமுதங்களை உண்டு பசியை நிரந்தரமாக போக்கிக்கொண்டு நித்திய வாழ்வு வாழ்வோமாக!

## அகவல்பா

**" அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலை வாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ்ஜோதி"**

ஆதி காலத்திலே வாழ்ந்த தமிழன் சூரிய சந்திரர்கள் தான் இந்த உலகத்தை இயக்குகின்றனர் என எண்ணி சூரிய சந்திரரை வழிபட ஆரம்பித்தார்கள். அதன் பிற்பாடு கொஞ்சம் அறிவிளக்கம் அடைந்த மனிதர்கள் சூரிய சந்திரர்கள் தன்னிச்சையாக இயங்க முடியாது அதற்கு மேலே ஏதோ ஒரு சக்தி சூரிய சந்திர்களை இயக்குகின்றது என்று எண்ணி அந்த சக்தியை கந்தளியோதியாக வழிபாடு செய்தார்கள். அதன் பிற்பாடு பக்குவம் அடைந்து அகவிளக்கம் பெற்ற மனிதன் தன்னுடைய அகஅனுபவத்திலே செஞ்சோதியாக கண்டு அனுபவித்து அந்த செஞ்சோதிக்கு சிவம் என்று பெயர் இட்டு வழிபட்டு வந்தார்கள். அதன் பிற்பாடு அகத்திலே லிங்கமாக அனுபவித்து இயற்கையையே ஆவுடையாகவும் லிங்கமாகவும் வெளிப்படுத்திக்காட்டி மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற வழிபாட்டு முறையினை உலக மக்களை வழிபாடு செய்ய வைத்தார்கள். அதன் பிற்பாடு வேதஆகம விதிமுறைப்படி ஆலயங்களை அமைத்து புறநிலையிலே நமசிவாய என்றும்

அகநிலையிலே சிவாயநம என்றும் இன்னும் அகஅனுபவ நிலையிலே பொருந்தி மந்திரங்களை நினைவு செய்து அந்த மந்திரத்திலே ஆழ்ந்து ஐக்கிய வாழ்வைப் பெற்று இன்னும் அதிசூட்சுமமாகச் சென்று சிவாயசிவ என்ற மந்திரத்தை நினைவு செய்து அந்த சிவப்பரம்பொருளிலே அழுந்தி ஐக்கிய வாழ்வைப் பெறமுனைந்தார்கள்.

அதன் பிற்பாடு 19ம் நூற்றாண்டு காலப்பகுதியிலே வாழ்ந்த இராமலிங்கப்பெருமான் அவர்கள் மனிதன் சிவப்பரம்பொருளிலே அழுந்தி ஐக்கிய வாழ்வைப் பெறுவது சரியல்ல என்றும் இறைவனுடைய பண்பையும் பயனையும் உணர்ந்து பண்பை அருட்பெருஞ்ஜோதியாகவும், பயனைத் தனிப்பெருங்கருணையாகவும் அகஅனுபவத்தில்க் கண்டு ஒவ்வொரு மனிதனும் தன்னகத்தே அருட்பெருஞ்ஜோதியாகக் கண்டு அதில் பிறலாமல் பொருந்தி நின்று தனிப்பெருங்கருணையோடு ஜீவகாருண்ய தொண்டு புரிந்து வாழ இந்த அழிகின்ற தூல உடம்பினை அருள் ஒளி நிரப்பி அழியாத அருள் ஒளி உடம்பாகமாற்றிக் கொண்டு அனகமாக வாழ்ந்து இறை அனுபவத்தோடு வாழலாம் என்பதை தெரிவித்து இந்த வாழ்வு எனக்கு மட்டும் உரியது அல்ல என்றும் உலகத்திலே மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொரு ஆன்மாக்களும் இறை அருள் ஒளி நிலையில்ப் பொருந்தி தூல உடம்பை என்றும் அழியாத அருள் ஒளி உடம்பாக மாற்றிக்கொண்டு மரணமில்லாப் பெருவாழ்வு வாழலாம் என்று கூறி இவ்வண்ணமான அனக வாழ்வை வாழ்வதற்காக இறைவனை அருட்பெருஞ்ஜோதியாகவும் தனிப்பெருங்கருணையாகவும் உணர்ந்த வள்ளல்பெருமான் உயிர் இரக்கத்தின் உச்ச நிலையில் நின்று இறைவனை அருட்பெருஞ்ஜோதியாக வெளிப்படுத்திக்காட்டி மக்களினம் மேம்பாடு அடையும் பொருட்டு

**“அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி”**

எனும் மகாமந்திரத்தையும் தந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றார். ஆதன் காரணமாகத்தான் மேலே

குறிப்பிட்ட 2 அகவல்பா வரிகளிலும் இறைவனுடைய பெருமையை வாழ்த்துவது போன்று அமைந்துள்ளது.

## மருத்துவக் குறிப்பு

### தூதுவளை

இந்த உடம்பிலே வெளியிலிருந்து உள்ளுக்கு கொடுக்கின்ற ஆகாரங்களாயினும் சரி,பானங்கள், உற்சாகபானங்களாயினும் சரி அவற்றினுடைய தன்மைக்கேற்ப ஜீவனையும் இந்த உடலையும் நட்டமடையக் கூடிய தீய உஷ்ணத்தையோ அல்லது ஜீவனையும் உடலையும் ஆக்கவல்ல உஷ்ணத்தையோ கொடுக்கின்றவையாக இருக்கின்ற சித்தர்களினுடைய திருவாக்கின்படி ஜீவனும் இந்த உடம்பும் மனிதனாலே நித்தியமாக்கப்பட வேண்டும். இது மனிதர்கள் ஓவ்வொருவரினுடைய கடமையாகும். இதற்கு முக்கியமாக தத்துவங்களை வழிப்படுத்தலும் அந்த தத்துவங்கள் நல்ல வழியிலே இயங்க வேண்டுமானால் நல்ல ஆக்க உஷ்ணத்தைக் கொடுக்கக் கூடிய நல்ல சத்துவ ஆகாரங்களையும் சத்துவ குணத்தை வளர்க்கக்கூடிய பானங்களை மட்டுமே மனிதர்கள் உட்கொள்ளுதல் வேண்டும். ஆனால் தற்கால மனிதர்கள் மோக உணர்வை வளர்ப்பதற்கான சாத்வீகம் இல்லாத அசைவ ஆகாரங்களையும் தீய உஷ்ணத்தை வளர்க்கக்கூடிய உற்சாக பானங்களையும், உட்கொண்டு ஆணவதிதினுடைய வளர்ச்சியால் அகங்கார மமகாரங்களை வளர்த்துக்கொண்டும் தன்னைத்தான் அழித்துக்கொண்டும் நல்ல தயவுள்ளவர்களுடைய வாழ்க்கைக்கு இடையூறாகவும் நல்ல தயவு நிறைந்த செயல்களைத் தடுத்து நிறுத்தியும் தாமும் அழிவது போதாதென்று மற்றவர்களையும் துன்பங்களைக் கொடுத்து இயற்கையையும் அழித்து கருணையில்லாதவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். இதன் அடையாளமாகப் பார்க்கும் பொழுது உற்சாகபானங்கள் விற்பனை செய்யும் நிலையங்களும் தாமத குணத்தை ஏற்படுத்தக்கூடிய மாமிச கடைகளும் கிராமங்கள் தோறும் அதிகரித்து விட்டன. இந்தச்

செயற்பாடுகள் யாவும் இயற்கைச் சீற்றங்களுக்கே வழிகோலப்போகின்றது.

இனி தூதுவளை மூலிகை பற்றி ஆராய்வோமானால் இந்த தூதுவளையானது ஞான மூலிகைக்குள் அடங்குகின்றது. இந்த தூதுவளை ஞானத்தை வளர்பதற்குரிய ஆக்க உஷ்ணத்தை தரக்கூடியதாக இருக்கின்றது. இந்த ஆக்க உஷ்ணமானது தூதுவளை சமிபாடடைந்து ரத்தத்தோடு கலந்து மூளைக்குச் சென்று மூளையை நன்கு விரிவடைய வைத்து நல்ல அறிவுத்திறனையும் ஞாபகசக்தியையும் வழங்கக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் இரும்புச்சத்து அதிகம் உள்ளதால் மலத்தை சுலபமாகப் போக்கி பெருங்குடலை சுத்தமாக வைத்திருப்பதற்கு உதவுகின்றது. அத்துடன் ஒவ்வொருவருடைய மரணத்திற்கும் காரணமாக இருக்கின்ற கபத்தை (சளியை) கட்டுப்படுத்தி நீண்ட ஆயுளைக் கொடுக்க வல்லதாயும் இருக்கின்றது. அதனால் ஒவ்வொரு வீடுகளிலும் தூதுவளையை உற்பத்தி செய்து நன்றாக உண்டு நீண்ட ஆயுட்பெருக்கோடு வாழ்வோமாக.

***தொகுப்பு: வள்ளல் அடிமை கனகசபாபதி கேதீஸ்வரன்.***

# சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானகோட்டம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் தொலைபேசி இலக்கங்கள்

தொடர்புகளுக்கு : 0217306010
கைபேசி எண்கள் : 0773321535
0775857934
0766156198

வள்ளலார் குறித்த விபரங்கள் கீழ்க்காணும் இணையத்தளங்களில் காணலாம்.

1. www.Vallalar.org
2. www.Vallalarspace.com

*தயவு*
*"எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க*
*கொல்லா நெறியே குவலயமெல்லாம் ஓங்குக."*

*என்னால் நீங்கள் உய்வடைவது சத்தியம்*
*இவ்வண்ணம்*
*அருட்பிரகாச வள்ளலார்.*

*தொகுப்பு : வள்ளல் அடிமை கனகசபாபதி கேதீஸ்வரன்.*

*கணணி தொழில்நுட்பம், பதிப்பு, ஆக்கம் :*
*தயவுச்செல்வி. டினோஜா இந்திரலோகன்.*

